# பன்மைத்துவ தேசம் ஒன்றில் இன முரண்பாடுகளுக்கான காரணிகளும் விளைவுகளும் தீர்வுகளும் -ஓர் ஆய்வு

முகம்மது தம்பி முகம்மது றிஸ்வி
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*இஸ்லாமிய கற்கைகள் துறை*
*கிழக்குப் பல்கலைக் கழகம்*

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை ஒரு பன்மைத்துவ தேசமாகும். பன்மைத்துவம் என்பது இனம், நிறம், மதம், மொழி, பண்பாடு, கலாசாரம் போன்ற இயல்பான காரணிகளால் வேறுபட்ட சமூகங்கள் ஒரு தேசத்தில் ஒன்றித்து வாழ்வதாகும். அப் பன்மைத்துவ சூழலில், அங்கு வாழும் ஒரு சமூகத்தவர், இனத்தவர், மதத்தவர் பிற சமூக, இன, மதத்தவர்களுடன் அவர்களது உரிமைகள், சுதந்திரம் பாதிக்கப்படாத விதங்களில் ஒற்றுமையாகவும், சகோதரத்துவத்துடனும், சமாதானமாகவும் வாழ்வதை சகவாழ்வு எனப்படுகிறது.சமகாலத்தில் சமூகங்களிடையேயான பன்மைத்துவம், நாட்டின் அபிவிருத்திக்குரிய காரணியாக கொள்ளப்படுவதற்கு பகரமாக, பிளவுக்கும் பிரச்சினைக்குமான காரணியாகவும் சமூகங்களிடையேயான சக வாழ்வுக்கும் நாட்டின் அபிவிருத்திக்குமான தடைக்கற்களாகவும் மாறிவருகின்றது. இதனையே இங்கு ஆய்வுப்பிரச்சினையாக எடுத்துள்ளேன். தொடர்ந்தும் இந்நாட்டின் இனங்களுக்கிடையிலான முரண்பாட்டு மோதல் நிலை நல்லதல்ல என்ற வகையில், முரண்பாடுகள் இயல்பானவை என்ற போதிலும் அதனைக் கையாளுவது எவ்வாறு என்பதற்கான வழிமுறைகளை கண்டறிவதும், சகவாழ்வை கட்டியெழுப்பி ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதற்கான பரிந்துரைகளை வழங்குவதும் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மேலும் இஸ்லாத்தின் சகவாழ்வு தொடர்பான கருத்தியல் மற்றும் வரலாற்று அம்சங்களை வெளிக்கொண்டு வருவதன் ஊடாக பன்மைத்துவ இலங்கையில் சகவாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது உப நோக்கங்களாகும். இதற்காக பொது மறை அல்குர்ஆன் மற்றும் இஸ்லாமிய சமய அடிப்படை நூல்கள்,ஆய்வுகளும் நேர்காணல்களும் முதற்தர மூலாதாரமாகவும். இணையத்தள தகவல்கள், ஆக்கங்களை இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் கொண்டு வரலாற்று, சமூகவியல், இனத்துவ, பண்புசார் ஆய்வு முறைமை இங்கு கையாளப்பட்டுள்ளது. இந்த எனது ஆய்வானது இஸ்லாமிய வழிகாட்டல்களிலும் இஸ்லாமிய பன்மைத்துவ நல்லாட்சி கால வராற்றிலும் பேணப்பட்ட சில சான்றுகளை இக்கட்டுரையில் முன்வைப்பதன் ஊடாக, பெரும்பான்மை சிறுபான்மை என்ற வேறு பாடுகளுக்கு அப்பால், பன்மைத்துவ சூழல் மற்றும் மனிதம் என்பன கருத்தில் கொள்ளப்பட்டு சகவாழ்வு எந்தளவு முக்கியத்துவமிக்கது என்பதை வெளிக்கொணருகிறது. மேலும் இலங்கையில் இடம்பெற்ற பல இன,மத முரண்பாடுகள், கலவரங்களால் ஏற்பட்ட விளைவுகளை சுட்டிக்காட்டுவதன் ஊடாகவும் இஸ்லாமிய ஆட்சிகால சில சகவாழ்வு வரலாற்றை முன்வைப்பதன் மூலமாக இன்றைய சகவாழ்வின் முக்கியத்துவத்தை உணர்த்தி, எதிர்காலங்களில் இப்பன்மைத்துவ தேசத்தில் முரண்பாடுகள், கலவரங்கள் ஏற்படாதிருப்பதற்கான முன்மொழிவுகளையும் தந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** பன்மைத்துவம், முரண்பாடு, காரணி, விளைவு, தீர்வு

**அறிமுகம்**

பன்மைத்துவம், பிரபஞ்ச ஒழுங்கில் இயல்பானதோரு அம்சமும், இறை நியதியுமாகும். இனத்தால், நிறத்தால், மதங்களால், மொழிகளால், பண்பாடு, கலாசாரம் போன்ற வற்றால் வேறுபட்ட சமூகங்கள் ஒரு தேசத்தில் வாழ்வதை அப்பதம் குறிக்கிறது. பன்மைத்துவக் காரணிகள் அல்லது பண்புகள் ஒரு தேசத்தின் அபிவிருத்திக்கு வழிகோல வேண்டுமே தவிர முரண்பாடுகளுக்கும், மோதல்களுக்கும் வழிகோலலாகாது. தனிமனித, குடும்ப மற்றும் சமூக வாழ்வு முதல் சமயம், அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் என

அனைத்து விடயங்களிலும் முரண்பாடு அல்லது மோதல் நிலை என்பது இன்று ஒரு சாதாரன அம்சமாக இத்தேசத்தில் மாறியுள்ளதைக் காணலாம்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் (சுமார் 21,512,915 - 2021 ஆகஸ்ட்) பௌத்தர்கள்,இந்துக்கள், இஸ்லாமியர்கள்,கிறிஸ்தவர்கள்,என நான்கு மதத்தவர்கள், இனத்தவர்கள் வாழுந்து வருகின்றனர். இவ்வாறாக பல மத, இன, மொழி, கலாசார, பின்னணிகளையும் வேறுபாடுகளையும் கொண்ட மக்கள் வாழும் ஒருஅருமையான தேசமே இலங்கை.

மத, இன, மொழி, கலாசார இவ்வேறுபாடுகள் கூட இத்தேசத்தின் மகத்தான வளங்களாகும். இங்கு பெரும்பான்மை சமூகத்தவர்களாக பௌதர்கள் வாழ்ந்து வருவதோடு ஏனைய மதத்தவர்கள் சிறு பான்மையினராகவும் காணப்படுகின்றனர். இந் நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் பன்மைத்துவ உணர்வோடு வாழவேண்டும். அடுத்தவர்களது இன, மத, மொழி, கலாசாரம் சார்ந்த உணர்வுகளை மதித்து, சகவாழ்வு பேணுவது இன்றியமையாததாகும். ஆயினும் இன்று இப்பன்மைத்துவத்தை சரிவர அறிந்து, புரிந்து நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பு செய்வதற்கு பதிலாக, இயல்பான இவ் பன்மைத்துவ வித்தியாசங்களும் வேறுபாடுகளும் பிளவுக்கும் பிரிவினைக்குமான காரணிகளாக பயன்படுத்தப் படுகின்றமை கவலைக்கிடமானதாகும். இதனால் தேசிய ஒற்றுமையும், ஒருமைப்பாடும், அபிருத்தியும் சக வாழ்வும் சீர்குழைக்கப்பட்ட வண்ணமுள்ளமை மனவேதனையாகும்.

பொதுவாக பன்மைத்துவ இலங்கை வரலாற்றில் சமூக முரண்பாடுகளும் மோதல்களும்மத, இன, மொழி, கலாசரா காரணிகளை அடியாகக் கொண்டே அதிகம் நிகழ்ந்து வந்துள்ளதுடன், நிகழ்ந்து கொண்டும் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கு தீர்வுகளை காண்பதற்கான பொறிமுறைகளை கையாளுவது அவசியமாகும்.

மதம், இனம், மொழி, தேவைகள், இடம், அந்தஸ்து, அரசியல், பொருளாதாரம், கலாசாரம்,பண்பாடு, பழக்க வழக்கங்கள் போன்ற தனிமனித, சமூக பன்முக வேறுபாடுகள் முரண்பாடுகளுக்கான காரணிகளாக அடையாளப்படுத்தலாம்.நீதி, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், உரிமை, சகிப்புத்தன்மை, நல்லிணக்கம் என்பன சகவாழ்வுக்கான அடிப்படைகளாக கருதலாம்.

சக வாழ்வு என்பது: ஓரு சமூகத்தவர், இனத்தவர், மதத்தவர் பிற சமூக, இன, மதத்தவர்களுடன் அவர்களது உரிமைகள், சுதந்திரம் பாதிக்கப்படாத விதங்களில் ஒற்றுமையாகவும்,சகோதரத்துவத்துடனும், சமாதானமாகவும் வாழ்வதைக் குறிக்கிறது. சகவாழ்வு பன்மைத்துவ தேசம் ஒன்றின் சிறப்பியல்பாகும். எனவே சகவாழ்வு பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான பொறிமுறைகள் யாவை என ஆய்வு செய்யப்பட்டு தேச நலனுக்காகவும், அதன் அபிவிருத்தக்காகவும் தீர்வு முன்மொழிவுகள் வெளிக்கொணரப்படல் வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

- சிறுபான்மை முஸ்லிம் ஆட்சி வரலாற்றில் இடம் பெற்ற சகவாழ்வு முன்மாதிரிகளை வெளிக்கொணரல்.
- பன்மைத்துவ இலங்கையில் சகவாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது.

- பன்மைத்துவ இலங்கையில் சகவாழ்வைப்பாதிக்கும் காரணிகளையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் கண்டறிதல்.

**ஆய்வுப் பிரச்சினை**

- இனம், மதம், மொழி, கலாசாரம் போன்ற சமூகங்களிடையேயான இயல்பான வேறுபாடுகள் பிளவுக்கும் பிரச்சினைக்குமான காரணியாகவும் சமூகங்களிடையேயான சக வாழ்வுக்கும் நாட்டின் அபிவிருத்திக்குமான தடைக்கற்களாகவும் மாற்றப்பட்டு விட்டன.
- இன,மத,கலாசார அடிப்படையிலான முரண்பாடுகளை எப்படி கையாளுவது ,தீர்வுகள் எட்டப்படாத பொழுது ஏற்படக் கூடிய விளைவுகள் என்ன, பல்வகை தன்மை கொண்ட முரண்பாடுகளை அதன் தன்மை, இயல்பு, பாரதூரம், முக்கியத்துவம் இவைகளுக்கு ஏற்ப எப்படி அனுகுவது.
- இலங்கை போன்ற பன்மைத்துவ தேசம் ஒன்று பன்மைத்துவத்தைப்பேணி வாழ்வதற்க்கு முன்மாதிரியின்றிக் காணப்படுகிறதா.

**இலக்கிய மீளாய்வு**

தாஹா ஜாபிர் அல்வானி, (2017),“முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்” எனும் அவரது நூலில் முரண்பாடுகள், அதன் தன்மைகள், பின்புலம், பண்புகள், அதன் இயல்புகள் பற்றிய தகவல்களை அல்குர்ஆனிய வரலாற்று நோக்கில் முன்வைக்கிறார். ஆனால் முரண்பாடுகளை எப்படி கையாளுவது என்ற கருத்தியல்கள் அதில் குறைவாகவே காணப்படுகிறது. மேலும் சமூக முரண்பாடுகளுக்கான தீர்வுகளை முன்வைத்துள்ளதை விட சட்டரீதியான கருத்து வேற்றுமைகளுக்கு எப்படி தீர்வுகளைக் பெறலாம் என எழதியுள்ளார். ஹாரிஸ் எச்.எல்.எம். (2013) “சகவாழ்வு சாத்தியப்படுவதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் என்ற நூலில் மனித சகோதரத்துவம், சகவாழ்வு, போன்ற விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. இந்நூலானது இவ்வாய்வினை செய்வதற்கு சில வழிகாட்டல்களை வழங்குகின்றது. அமீன் ஸீ.எம்.ஏ (2012)“ஹிந்து மதம், பௌத்தம், இஸ்லாம் ஓர் ஒப்பீட்டாய்வு” என்ற ஆய்வில் பௌத்த சமயத்திலுள்ள சிந்தனைகள், கொள்கைகளை அறிந்து கொள்ள துணை புரிவதுடன் இவ்வாய்வுக்குத் துணை புரிவதாயும் அமைந்துள்ளது. சண்முகலிங்கம்.க (2011) “இலங்கையின் இனவரையியலும் மானிடவியலும்” என்ற ஆய்வில் சிங்கள சமூகம் பற்றிய விடயங்கள் விளக்கப்பட்டுள்ளது. பௌத்த சமூகம் பற்றிய முழுமையான விடயங்கள் அதில் இடம்பெறவில்லை.

றசாக் முஹம்மட் அலி (2005) “இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வும் முஸ்லிம்களும்” என்ற அவரது ஆய்வில் இலங்கை சிறுபான்மையினர் விவகாரங்கள், முஸ்லிம்களும் இனப்பிரச்சினை மற்றும் சமாதானத்தின் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. நடேசன்.ஜி (2000) “இலங்கையில் இன முரண்பாடுகளின் வரலாறு” என்ற அவரது நூலில் இலங்கையில் இன முரண்பாடுகளின் தோற்றம், வளர்ச்சி, அதன் வரலாறு குறித்து ஆய்வு செய்துள்ளார்.இவை இவ்வாய்க்கு துணை செய்கிறது. மன்ஸுர்,எம்.ஏ.எம் (1999),“இனப்பிரச்சினை ஓர் இஸ்லாமிய கண்ணோட்டம்” எனும் தனது நூலில் பொதுவாக இனப்பிரச்சினைகள், அவை எவ்வாறு தோன்றுகின்றன என்பது பற்றி இஸ்லாமிய சமய விழுமியங்களின் சார்பு நிலை தழுவி கருத்துக்கள் வெளிகொணரப்பட்டுள்ளன.

நூறுல் ஹக் எம்.எம்.எம். (1998) ‘‘தீவும் தீர்வுகளும்’’ எனற் நூலில் இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிரான முரண்பாடுகள், மற்றும் பேரினவாத சக்திக்கு மத்தியில் முஸ்லிம்களின் நிலைப்பாடு தொடர்பாக விளக்கப் பட்டுள்ளது. முகம்மது சமீம் (1997) ‘‘ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்’’ என்ற இந்நூல் குறிப்பாக இலங்கையிலுள்ள சிறுபான்மை சமூகத்தை பற்றி அவர்களது பன்முகப் பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்றது. அப்துல் கறீம் மு. (1996) ‘‘இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்’’ எனும் நூலில் இஸ்லாம் முன்வைக்கும் சகவாழ்வு, நல்லிணக்கம் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. இந்நூல் சகவாழ்வு சமூக நல்லிணக்கம் சம்பந்தப்பட்ட தகவல்களை அறிந்து கொள்வதற்குத் துணை புரிவதுடன். சகவாழ்வு பேணுவதற்கு ஊக்கமளிப்பதாய் அமைந்துள்ளது.

வல்பொல சிறி இராகுலர் (1989)‘‘புத்த பகவான் அருளிய போதனை’’ எனும் நூலில் சகவாழ்வு, ஒழுக்க நெறிகள் போன்ற பல அம்சங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இவ்விடயங்கள் இவ்வாய்வுக்கு உறு துணையாய் அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட நூல்களும் ஆய்வுகளும் இவ் எனது ஆய்வுக்குத் துணை புரியும் வகையில் காணப்படுகின்ற போதிலும் இவ் எனது ஆய்வுத் தலைப்பு தொடர்பாக இதுவரை தனியானதும் விரிவானதுமான ஆய்வுகள் எவையும் இடம் பெற்றுள்ளதாக என்னால் காணமுடிய வில்லை. அந்த வகையில் இவ் ஆய்வு முக்கியத்துவம் பெறுவதுடன், சகவாழ்வு பற்றி பலராலும் எழுதப்பட்டுள்ள பல ஆக்கங்கள் சகவாழ்வின் முக்கியத்துவங்களை உணர்த்தி நிற்கின்றதே தவிர, செயல் ரீதியான அமுலாக்க முன்மொழிவுகளை தந்துள்ளமை மிகமிக குறைவாகும். அதனை இந்த எனது ஆய்வு நிவர்த்திக்கும் என கருதுகிறேன்.

**இஸ்லாமிய நல்லாட்சி வரலாற்றில் சகவாழ்வு**

இக் கட்டுரை சகவாழ்வின் முக்கியத்துவத்தை இஸ்லாமிய வரலாற்று முன்மாதிரிகளிலிருந்து உணர்த்தி, எதிர்காலங்களில் இப்பன்மைத்துவ தேசத்தில் முரண்பாடுகள், கலவரங்கள் ஏற்படாதிருப்பதற்கான முன்மொழிவுகளையும் தர முனைகிறது.

சகவாழ்வை அனைத்து மதங்களும் முக்கியத்துவப்படுத்துகின்றன.சகவாழ்வு பேணி வாழ வேண்டும் என்பதில் கருத்தியல் ரீதியாகவும், செயற்பாட்டு ரீதியாகவும் முன்மாதிரிகளைத் தந்துள்ளன. குறிப்பாக இஸ்லாத்தின் நீதிச்சட்டம், அதன் போதனைகள் யாவுமே மக்களிடையே சகவாழ்வை பேணக் கட்டளை பிறப்பித்துள்ளது. பன்மைத்துவ சமூக முறைமைக்குள் பிற சமூகங்களுடன் பிணங்கிக் கொள்ளாது இணங்கி வாழச்செய்வதற்கான வழிகாட்டலை வழங்குவதே இஸ்லாத்தின் அடிப்படை நூலான அல் குர் ஆனின் புரட்சியாகும்.

அல்குர்ஆன் எல்லோருடையதும் பொது மறை, அது ஒரு இனத்துக்கோ, சமூகத்துக்கோ மாத்திரம் உறித்தானதல்ல, முழு மானுட சமூகத்துக்குமுறியதாகும். அது சிறந்த வாழும் நாகரிகத்தையும் நிலையான கொள்கையையும் தெளிவு படுத்துகிறது. பிற மதங்களோடும் அதன் நாகரிகங்கள், கொள்கைகளோடும் எப்படி இணைந்து பயணிக்க வேண்டும் என்பதை புரியவைக்கிறது. உறவுகளை சிறப்பாக கட்டியெழுப்பும் பணிக்கான அடிப்படைகளாக சக வாழ்வையும், சகிப்புத் தன்மையையும் மனித உள்ளங்களில் அது விதைக்கிறது. அல்குர்ஆன் வசனங்களான 02:256, 05:48, 10:99, 17:70, 49:13, 04:35, 109:1-6 இவை சகவாழ்வின் முக்கியத்துவத்தை சிறப்பாக உறுதிப்படுத்துகின்றன.

பன்மைத்துவத்தின் அடிப்படையாக சகவாழ்வு அமையும் காலமெல்லாம் சமூக உறவுகள் ஒரு பொழுதும் வீழ்ச்சி காணாது. அல்குர்ஆன் மனிதன் விடயத்தில் மாத்திரமின்றி, மனிதன் அல்லாத படைப்புகளின் நலன் மற்றும் நன்மை சார் விடயங்களிலும் கவனம் செலுத்த வழியுறுத்துகிறது. நன்மையான காரியங்களுக்கு மாத்திரமே ஒத்துழைக்குமாறும் அழைக்கிறது.பிறருக்கு உதவுதல், நீதியாக நடத்தல், விட்டுக்கொடுத்தல், ஒத்துழைத்தல், நன்றி பாராட்டுதல், நல்லெண்ணம் கொள்ளல், இங்கிதமாக நடந்து கொள்ளல் போன்றவற்றை அல்குர்ஆன் முன் மொழியும் சகவாழ்வுக்கான விழுமியங்களாகும். மேலும் கருத்துச் சுதந்திரம், மனித சமத்துவம், தங்கி வாழல், சமூக நீதி, கலந்து வாழல் என பல உயர் விழுமியங்களையும் கூட சகவாழ்வின் விழுதுகளாக குர்ஆன் முன் மொழிகிறது. பொதுவாக பௌத்த, இந்து,கிறிஸ்தவ சமய நூல்களும் கூட சகவாழ்வின் முக்கியத்துவம் பற்றிய கருத்தியல்களை தெளிவாகவே முன்வைக்கின்றன.

இஸ்லாமிய வழிகாட்டல்களிலும் இஸ்லாமிய பன்மைத்துவ நல்லாட்சி கால வராற்றிலும் பேணப்பட்ட சில சான்றுகளை இக்கட்டுரையில் முன்வைப்பதன் ஊடாக, பெரும்பான்மை சிறுபான்மை என்ற வேறு பாடுகளுக்கு அப்பால், பன்மைத்துவ சூழல் மற்றும் மனிதம் என்பன கருத்தில் கொள்ளப்பட்டு சகவாழ்வு எந்தளவு முக்கியத்துவமிக்கது என்பதை வெளிக்கொணருகிறது.

பொதுவாக மதவெறி, இனவெறியை இஸ்லாம் முற்றாக வெறுக்கிறது.காரணம் அவ்வெறியே சகவாழ்வை பாதிக்கும் முதன்மைக்காரணியாக அமைகிறது. ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் பிற மதத்தின் மீது கொடுமை செய்ய முற்படுகின்ற போது அதற்கும், அவர்களுக்கும் துணை போவது இனவெறி என இஸ்லாம் கருதுகிறது. ‘‘ஒரு தடவை நபி முஹம்மது (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து, இறைத் தூதரே ஒருவர் தனது சமூக மக்களை நேசிப்பது இனவாதமாகுமா? என வினவிய போது நபிகளார் இல்லை என்றார்கள். மாறாக ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர் பிற சமுதாயத்தின் மீது வேண்டுமென்றே துன்பம் விளைவிக்கும் போது அதற்கு துணை நிற்பதே இனவாத மாகும்’’ என்றார்கள்.

நஜ்ரான் பிரதேசத்திலிருந்து கிறிஸத்வ பாதிரிகள் குழுவொன்று நபி (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக மதீனாவுக்கு வந்தார்கள். மஸ்ஜிதுந் நபவியிலேயே இச்சந்திப்பு இடம்பெறறது. நபி(ஸல்) அவர்கள் அப்பாதிரிகளை சிறப்பாக உபசரித்தார்கள், அவர்களது சமய கிரியை களுக்காக மஸ்ஜிதுந் நபவி பள்ளி வாயல் வளாகத்தில் இடமளித்தார்கள், இரவு அங்கு அவர்களை தங்கச் செய்தார்கள்,உமர் (ரழி) அவர்களை அவ்விருந்தினர்களை கவனிக்கும் பணிக்காகவும் நியமித்தார்கள்.

இப் பாதிரிகளுக்கும், நபிகளாருக்குமிடையிலான சந்திப்பில் நபிகளார் அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதியில் காணப்பட்ட பின்வரும் வாசகம் சிறந்த சகவாழ்வு முன்மாதிரியைதருகிறது: ‘‘சிலுவைகள், மூர்த்திகள் மற்றும் உங்களின் எந்தவொரு மத அடையாளங்களுக்கும் பாதகம் விளைவிக்க மாட்டோம்.’’

சினாய் மலைப் பிரதேச கிறிஸ்த்தவப் பாதிரிகளோடு நபிகளார் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் ‘‘கிறிஸ்தவப் பாதிரிமார்களும், கிறிஸ்தவ மக்களும் மலை முகடுகளிலோ,மாதா கோயில்களிலோ வழிபாடு செய்து கொண்டிருக்கும் போதும், வாழ்ந்து கொண்டிருக்கும் போதும் அவர்களுக்கும், அவர்களது உடமைகளுக்கும், நானும் எனது சமூகத்தவர்களும் பாதுகாப்பாய் இருப்போம்.’’ என்ற சிறப்பான உத்தர வாதத்தை வழங்கி நல்லிணக்கம் பேணினார்கள்.

இஸ்லாம் பிற சமுதாய மக்களுடைய உரிமைகளை பாதுகாக்க வலியுறுத்துகிறது. பள்ளிவாசலை மாத்திரமன்றி பிற மத வழிபாட்டுத் தலங்கள் அனைத்தையுமே பாதுகாப்பு விடயத்தில் ஒரே விதமாகவே நோக்குகிறது. இஸ்லாமிய அரசில் சிறுபான்மையினர் எத்தகைய அச்சமுமின்றி பாதுகாப்புடன் தமது இன, சமூக, மத கலாசார, உரிமைகள் பேணி சிறப்பாக வாழ்ந்துள்ளனர். கிறிஸத்வர்கள், யூதர்கள், சிலை வணங்கிகள், நெருப்பு வணங்கிகள் என அனைவரும் தங்கள் சமய வழிபாடு, கலாசாரம், பண்பாடு, வாழ்வியல் நெறிகள் அனைத்தையுமே பூரண சுதந்திரத்துடன் பின்பற்ற அனுமதிக்கப்பட்டிருந்தனர். இஸ்லாமிய ஆடசியில் வாழ்ந்த பிறசமயத்தவர்கள் அரசுக்கு ஜிஸ்யா வரி செலுத்தினர். அரசுடனான ஒப்பந்தத்தினூடாக இஸ்லாமிய நாட்டின் பிரஜைகளாக இவர்கள் வாழ்ந்தனர். வரியை அரசுக்கு செலுத்தியதன் மூலம் சட்ட ரீதியான இரண்டு நன்மைகளை அவர்கள் அடைந்தனர்.

1. இஸ்லாமிய ஆட்சியில் முழுமையான பாதுகாப்பு.

2. அவர்கள் அரச படைகளிலோ, போர்களிலோ பங்கேற்க வேண்டிய தில்லை. ஜிஸ்யா வரி உடன்பாட்டுடன் வாழ்ந்த அவர்களது சக்திக்கு மீறி வரி வசூலிக்க வேண்டாம் எனவும் நபி (ஸல்) அவர்கள் உதத்ரவிட்டிருந்தார்கள்.

தஹ்ரான் கிறிஸ்தவர்களுடன் நபி முகம்மது (ஸல்) அவர்கள் செய்திருந்த பின்வரும் உடன்படிக்கை மத சமூக நல்லுறவிற்கும் சகவாழ்வுக்கும் சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளது. "தஹ்ரான் வாசிகளுடன், அவர்களைச் சார்ந்தோரும் கூட நபி முஹம்மது (ஸல்) அவர்களுடைய பொறுப்பில் இருப்பர். அவர்களின் உயிர், மதம், நிலம், உடமைகள் உட்பட, அவர்களுடைய வணக்கஸ் தலங்கள், வழிபாடுகள் அனைத்துக்குமே பாது காப்புண்டு, எந்தவொரு மதகுருவும் அவரது நிலையிலிருந்து நீக்கப்படமாடட்டார், அவ்வாறே எந்தவொரு மதக் கடமையை நிறைவேற்றுபவரும் அதிலிருந்து தடுக்கப்படமாட்டார், சட்டபூர்வமாக அவர்களின் கைகளிலுள்ள சிறிய பெரிய அனைத்தும் அவர்களுக்கே சொந்தம், அது வட்டியுடனும்,பழிக்குப் பழி வாங்கும் தண்டனைகளுடனும் தொடர்பற்றதாக இருத்தல் வேண்டும். ஒருவர் இவர்களிடமிருந்து ஓர் உரிமையை கோரினால் இரு தரப்பினருக்கும் எத்தகைய பாதிப்பும் ஏற்படா விதத்தில் நீதியான முறையில் தீர்த்து வைக்கப்பட வேண்டும். ஒருவரின் குற்றத்திற்காக மற்றொருவர் தண்டிக்கப்படமாட்டார். இவ்வுடன் படிக்கையின்படி நடப்பதற்கு இறைவனும் அவனது தூதரும் கடமைப்பட்டவர்களாவர். மேலும் அவர்கள் தங்களுக்கு மத்தியில் அநீதி இழைத்துக் கொள்ளாமல் சீராக நடந்து கொள்ளும் வரைக்கும் இவ்வுடன்படிக்கை நடைமுறையில் இருக்கும்."

நபி முஹம்மது(ஸல்) அவர்களது காலம் முதல் பிற்பட்ட இஸ்லாமிய ஆட்சி வரலாற்றுக் காலங்களை ஆராய்ந்தால் பன்மைத்துவமும் இஸ்லாமிய ஆட்சி கால சகவாழ்வும் மிகத்தெளிவானது."முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதினா பிரதேசத்துக்குச் சென்ற பயணம் ஹிஜ்ரத் ஆகும். அதன் போது அப்துல்லாஹ் இப்னு உரைக்கத் என்ற முஸ்லிம் அல்லாதவரையே தனக்கு வழிகாட்டியாக அவர்கள் தெரிவு செய்திருந்தார்கள்.

ஹுனைன் போரின் போது இஸ்லாத்தை தழுவாதிருந்த ஸப்வான் பின் உமையாவின் உதவிகளை நபிகளார் பெற்றார்கள்.""யூதர் ஒருவரிடம் நபிகளார் கடன் பெற்றார்கள்" "முஸ்லிமல்லாத மன்னர்கள் நபிகளாருக்கு அனுப்பி வைத்த அன்பளிப்புகளை மனமுவர்ந்து ஏற்றுக் கொண் டார்கள்". "ஓர் யூத மனிதனின் பிரேதம் சுமந்து செல்லப்பட்ட மரண ஊர்வலத்தைக் கண்ட

நபியவர்கள் அதற்காக எழுந்து நின்றார்கள். அப்போது அது யூத மரண ஊர்வல மாயிற்றே எனக்கேடகக்ப்பட்ட போது, அவரும் ஒரு மனித ஆன்மா இல்லையா''?என நபி(ஸல்) கூறினார்கள்.

நல்லிணக்கம் மிகச் சிறப்பாக பேணப்பட்டது. சட்டத்தின் முன் யாவரும் சமம் என்பது இஸ்லாத்தின் கொள் கையாக காணப்பட்டது. சட்டத்தின் முன் முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர் என்ற வேறுபாட்டை இஸ்லாமிய ஆட்சி வரலாற்றில் எங்குமே காண முடியவில்லை.

ஒரு யூதர் மீது சில முஸ்லிம்களால் திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்ட போது அவர் நிரபராதி என்பதை நிரூபித்து அல்குர்ஆன் வசனங்களே அருளப்பட்ட சம்பவங்களைக் கூடப் பார்க்கலாம். ''அல்லாஹ் உமக்கு அறிவித்ததைக் கொண்டு மனிதர்களுக்கிடையில் நீர் தீர்ப்பளிப்பதற்காக நிச்சயமாக (நபியே) முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இவ் வேதத்தை நாமே உம்மீது இறக்கி வைத்திருக்கின்றோம். மேலும் சதிகாரர்களுக்கு (ச்சார்பாக) வாதாடுபவராக நீர் ஆகி விடவேண்டாம். மேலும் நீர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுவீராக நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக, மிகக் கிருபை உடையவனாக இருக்கிறான்.நபியே பிறருக்குத் தீங்கிழைத்து தமக்குத் தாமே மோசடி செய்து கொண்டார்களே அத்தகைய வர்களுக்காக நீர் வாதாட வேண்டாம். (ஏனெனில்) கொடிய பாவியான, மிக மோசக்காரனாக இருக்கிறவனை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கமாட்டான். இவர்கள் (தங்கள் மோசடிகளை) மனிதர்களிடமிருந்து மறைக் கின்றார் கள். அவர்கள் (அதனை) அல்லாஹ் விடமிருந்து மறைத்து விடவே முடியாது. ஏனெனில் அவன் பேச்சால் பொருந்திக் கொள்ளாததைக் கொண்டு இவர்கள் இரவெல்லாம் (சதிசெய்ய) ஆலோசனை செய்யும் போது அவன் அவர்களுடன் தான் இருக்கிறான். மேலும் அல்லாஹ், அவர்கள் செய்து கொண்டிருப்பவற்றை (தன் அறிவால்) சூழ்ந்து கொண்டவனாக இருக்கிறான்.அறிந்து கொள்ளுங்கள்! நீங்கள் தானே அவர்கள் அவர்களுக்காக உலக வாழ்வில் நீங்கள் வாதாடுகிறீர்கள் மறுமை நாளில் அவர்களுக்காக அல்லாஹ்விடம் வாதாடுபவர்கள் யார்? அல்லது எவர் இவர்களுக்கு பொறுப்பேற்பவராக இருப்பார்'' இந்த வசனங்கள் மூலமாக குறிப்பிட்ட அந்த யூதர் திருடனல்லன் என்பதை அல்லாஹ் நபி முகம்மதுக்கு(ஸல்) அறியப்படுத்தினான்.

சிரியா நாட்டை நோக்கி முஸ்லிம் படை புறப்பட்டுச் செல்லும் போது கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் வழியுறுத்திய பின்வரும் விடயங்கள் கூட சகவாழ்வை தெளிவு படுத்துகிறது. ''மோசடி செய்யாதீர்கள், வாக்குறுதி மீறாதீர்கள், அங்கவீனப்படுத்தாதீர்கள், முதியோர்களையும், சிறார்களையும், பெண்களையும் கொலை செய்யாதீர்கள், கனி தரும் மரஙக்ளை வெட்டவோ, எரிக்கவோ செய்யாதீர்கள் ஆடு, மாடு, ஒட்டகை போன்ற பிராணிகளை உணவுக்காக அன்றி அறுக்காதீர்கள், உடன்படிக்கை செய்தால் அதனை முறித்து விடாதீர்கள், நீங்கள் ஒரு சில மக்களை சந்திக்கலாம் அவர்கள் கோயில்களிலும், மடங்களிலும், ஆலயங்களிலும் வாழ்வை ஒதுக்கிக் கொண்டவர்கள். அவர்களையும், அவ்வாலயங்களையும் அழித்திடாதீர்கள்''.

கலீபா உமர் (ரலி) அவரது இறுதிக்காலப் பகுதியில் அடுத்த கலீபாவுக்கு பின் வருமாறு உபதேசம் கூறினார்கள் ''பிற மதத்தவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் அவர்களுடனான உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அவர்களுடைய சக்திக்கு மேல் பொறுப்புக்களை சுமத்தாதீர்கள்''

கலீபா உமரின் ஆட்சி காலம் ஒரு தடவை ஹர்கல் சக்கரவர்த்தி சிரியாவை நோக்கி பெரும் படையோடு வரும் செய்தியறிந்து, அவ்வலிமை மிக்க படையை எதிர்கொள்ள வேண்டிய சூழல்

முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. இந்நிலையில் ஹிரா பகுதி வாழ் கிறிஸ்தவ மக்களை பாதுகாக்கும் அளவுக்கு பலம் முஸ்லிம் படைக்கு இல்லாதிருந்த நிலையிலும் பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொண்டதோடு,அம்மக்கள் வழங்கிய முழு அரச வரித் தொகையையும் அவர்களுக்கு மீளளித்து விடுமாறும் தளபதி அபூ உபைதா (ரழி), உமர் (ரழி) அவர் களின் உத்தரவுக்கு அமைவாக செயற்பட்டமை. முஸ்லிம் ஆட்சித் தலைவர்களின் நேர்மையான நல்லிணக்க செயற்பாட்டை வெளிப்படுத்தி நிற்கிறது.

உமைய கிலாபத்தின் ஸ்தாபகர் கலீபா முஆவியாவின் இருபதாண்டு கால வரலாற்றில் கிறிஸத்வர்கள் அதிகூடிய அரச செல்வாக்கைப் பெற்றிருந்தனர்.நிருவாகத்தின் உயரந்த பதவிகளில் பொறுப்புக்களில் கிறிஸ்த்வர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். கலீபா அப்துல் மாலிக் பின் மர்வானின் சிறந்த ஆலோசகராக செயின்ட் ஜான் என்பவரின் தந்தை காணப்பட்டார். மு.்.தஸிம் என்ற கலீபாவுக்கு சல்முயா, இப்றாஹிம் என்ற இரண்டு கிறிஸ்தவர்கள் அரசாங்க செயலாளர்களாகவும், நிதியாளரக்ளாகவும் விளங்கினர். நிதிப்பொறுப்பில் பிறமதத்தவர்களை நியமிக்கின்ற அளவுக்கு ஆடசித்தலைவர் அவரை நம்பினார். அவர் நோயுற்றிருந்த போது கலீபா அவரது இல்லம் சென்று கவனித்தார். அவர் மரணித்த போது அவரது பூதவுடல் கிறிஸத்வ மத சடங்குகள் பேணி அடக்கம் செய்யப்படுவதற்கான சகல ஏற்பாடுகளையும் கலீபா மேற்கொண்டார்.

அப்பாஸிய கலீபா மு.்.ததி காலததில் உமர் பின் யூசுப் என்ற அரபு கிறிஸத்வர் ஆளுநராக நியமிக்கப்பட்டார். கலீபா ஹாரூன் ரஷீதுடைய மருத்தவராக ஜிப்ரயீல் என்ற கிறிஸ்தவர் காணப்பட்டார். மத விவகாரங்களில் மத குருமார்களே விசாரணை செய்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்பதால் பிறசமய குருமார்களும் நீதித்துறையில் நியமனம் பெற்றிருந்தார்கள்.

இப்படி பிறமதத்தவர்கள் மீது இஸ்லாமிய ஆட்சியாளர்களால் பேணப்பட்ட, சகவாழ்வு பின்னர் வந்த முஸ்லிம் ஆடசியாளர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தன. பிற சமயத்தவர்கள் அவர்களது தனிப்பட்ட விவகாரங்களை தத்தமது தனியார் சட்டங்களுக்கேற்ப தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவும் இஸ்லாம் பூரண அனுமதியை வழங்கியுள்ளது. இஸ்லாத்தில் ஒரு விடயம் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் மற்றையவர்களது சமயத்தில் அது அனுமதிக்கப் பட்டிருப்பின் அதனை செய்வதற்குக் கூட அவர்களின் தனியார் சட்டத்தின் அடிப்படையில் அவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் என இஸ்லாமிய ஆடசியாளர்கள் கடட்ளையிட்டிருந்தனர். இது இஸ்லாமிய ஆடசிக்காலம் அனைத்திலும் கடைப்பிடிக்கப்பட்டது.

உலக வரலாற்றில் இஸ்லாமிய ஆட்சி காலத்தின் போது முஸ்லிம் அல்லாதவர்களின் தேவாலயங்களை புதிதாக நிர்மாணிக்கவும்,அவர்களது மத அனுஷ்டானங்களை புரியவும், அவர்களது பெருநாட்களை சுதந்திர மாக கொண்டாடவும் பூரண அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கிறிஸ்தவர்கள் அவர்களது புனித நாட்களில் சிலுவைகள், மெழுகுவர்த்திகளை சுமந்தவர்களாக முஸ்லிம்களின் ஆட்சி நடந்த நகரங்களில் வீதி ஊர்வலம் செல்லும் பூரண சுதந்திரத்தைக் கூடப் பெற்றிருந்தனர். இஸ்லாமிய வரலாற்றுக் காலபப்குதியில் மஸ்ஜிதுகளும், தேவாலயங்களும் அருகருகே இருந்தன. இஸ்லாமிய சட்ட நடைமுறைகளில் கூட சமூக நல்லுறவு சிறப்பாக பேணப்பட்டுள்ளன.

இத்தகைய அரச,சமூக செயற்பாடுகள், உடன்படிக்கைகள் மத நல்லிணக்கம், சமூக உறவு, சமூக உரிமை, நீதி இவைகளை எந்தளவு இஸ்லாமிய அரசு பேணியுள்ளது என்பதையும், பேண வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளதையும் பார்க்க முடிகிறது.

**சகவாழ்வும் இலங்கை பன்மைத்துவத்தேசமும்**

மேலுள்ள இஸ்லாமிய நல்லாட்சிக்கால சகவாழ்வு முன்மாதிரிகள் இலங்கைக்கும் முன்மாதிரியாக ஆகுவதில் எச்சிரமமும் இருக்காது எனக்கருதுகிறேன். பொதுவாக ஒரு தேசத்தின் பெரும்பான்மை சமூகத்தவர்கள்தான் அத்தேசத்தை ஆளும்வர்க்கமாக இருப்பர். எந்த இனத்தவராகவோ, மதத்தவராகவோ அப்பெரும்பான்மையினர் இருப்பினும் அங்கு சகவாழ்வு பேணப் படுமாயின் அத்தேசம் அபிவிருத்தியடையும் அத்தேசம் அமைதியான தேசமாகத்திகளும்.

இத்தேசத்தில் ஏற்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட முரண்பாடுகள், மோதல்கள் அணைத்தும் பின்வரும் பல்வேறு **பாதக விளைவுகளை** ஏற்படுத்தியுள்ளதோடு இத்தேசத்தின் சகவாழ்வையும் பெரிதும் பாதித்துள்ளது.அதாவது

1) **உளவியல் ரீதியான பாதக விளைவு -** அனைத்து சமூகங்களிடையேயான மனிதாபிமான உணர்வுகள், மனிதநேயம், சகோதரத்துவம் போன்ற நல்லம்சங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பாக சிறு பான்மையினர் மன அழுத்தத்துடனும் பீதியுடனும் வாழும் ஆரோக்கியமற்ற நிலையை தோற்று வித்துள்ளது.

2) **அரசியல் ரீதியாக** - இலங்கையில் ஜனநாயக ரீதியில் ஒவ்வொரு குடிமகனும் அனுபவிக்க வேண்டிய அடிப்படை உரிமைகளான மதச்சுதந்திரம், கருத்துச் சுதந்திரம்,மொழி உரிமை, பாதுகாப்பு, உள அமைதி போன்றன பாதிக்கபடுகின்ற நிலை தோன்றியுள்ளது. இவை சர்வதேச நாடுகளிடையே இலங்கையின் நன்மதிப்பையும் கீர்த்தியையும் கூட பாதிக்கின்றது. அத்துடன் சர்வதேச ரீதியான அரசியல், ராஜதந்திர ரீதியான உறவைக் கூட கடுமையாக சீர்குழைய வைத்துள்ளது.

3) **பொருளாதாதார ரீதியாக-** முரண்பாடுகள், மோதல்கள் தேசிய பொருளாதார அபிவிருத்திக்குத் தடையாக அமைகிறது. மதக்கலவரங்களும் இனமோதல்களும் அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற நிலையினையும், சமூகங்கள்களிடையே பிளவையும் பிணக்கையும் தோற்றுவித்து வருகிறது.உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கை, உற்பத்தி திறன், விநியோகம், ஏற்றுமதி, இறக்குமதி, அந்நிய செலாவணி, சுற்றுலா துறை போன்ற பொருளாதாரத்துடன் தொடர்புபட்ட பிரதான விடயங்களை முற்றாக பாதித்து வருகின்றது.

4) **சமூக ரீதியாக-** ஒவ்வொரு சமூகத்தவரும் குறிப்பாக சிறுபான்மையினர் தமது மத உரிமைகள், தத்தமது கலாசாரம், சலாசார அடையாளங்கள், உயிர், உடமைகள் என்பவற்றுக்கு பாதுகாப் பில்லாத நிலையை உணரும் சூழல் தோன்றியுள்ளது. மத வழிபாட்டுதலங்கள், மத கலாசார முதுசங்கள், பாரம்பரிய பொதுச் சொத்துக்கள் அழிக்கப்படுவதன் மூலம் நாட்டினதும் நாட்டில் வாழும் சமூகங்களினதும் வரலாறு அழிக்கப்படுகின்றது. சமூகங்களுக்கிடையே சந்தேகம், அவ நம்பிக்கை வலுபெற்றுள்ளது, சகிப்புத் தன்மையற்றதோர் சந்ததி உருவாக்க நிலை தோன்றியுள்ளது.குறிப்பிட்ட அனைத்து முரண்பாடுகளும் தாக்குதல்களும் சமூகங்களிடையே தப்பபிப்பிராயம், சந்தேகம்,குரோதம், பகைமை போன்ற எதிர்மறையான பதிவுகளை உருவாக்க வழிகோழுகிறது. மேலும் சமூகங்களிடையே விரிசலும் பிளவும் உருவாகிறது. இவ்வாறன ஆரோக்கியமற்ற நிலை தேசிய சர்வதேச தீய சக்திகள் தமது சுய நலன்களை அடைந்து கொள்வதற்குரிய சூழலை உருவாக்கி கொடுக்கின்றது.

மேற்குறிப்பிட்ட பாதகமான விளைவுகளுக்கு பின்வரும் காரணிகள்தான் அடிப்படையாகும்.

1) வரலாற்று ரீதியான காரணிகள்

காலனித்துவாதிகள் தங்களது ஆளுகைக்குட்பட்ட நாடுகளை ஆளுவதற்கான தந்திரோபாயமாக மதத்தையும் இனத்தையும் பயன்படுத்தியமையின் பாதிப்பு தொடர்கின்றது. சமகாலத்திலும் ஆதிக்க சக்திகள் மத வாதத்தையும் மதவெறியையும் மதக்கலவரங்களையும் பயன்படுத்தி தமது ஆதிக்கத்தை செலுத்துவதற்கும் நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கும் முனைவதை அவதானிக்கலாம். இலங்கையில் தொடராக நடைபெற்றுவரும் மதக்கலவரங்களுக்கும் இனமோதல்களுக்கும் பின்புலமாக தேசிய, சர்வதேச ஆதிக்க சக்திகள் செயற்படுகின்றன என்பதற்குஇலங்கையில் சமகால நிகழ்வுகள் சான்று பகர்கின்றன.

2) அரசியல் ரீதியான காரணங்கள்

யார் தேசத்தை ஆளப்போகிறார்களோ அல்லது ஆள வேண்டும் என திட்டம் இடுகிறார்களோ அவர்கள் தங்களது நலன்களை அடைந்துகொள்வதற்காகவும் வாக்கு வங்கிகளை தக்கவைத்து கொள்வதற்காகவும் இனத்தை,மதத்தை கருவியாக பயன்படுத்துகின்றனர். அத்துடன் தங்களது நலன்களுக்கு சவால்கள் எழும் போதெல்லாம் இன,மதவாதத்தை ஆயுதமாக பயன்படுத்தி எதிர்கொள்கின்றனர். இவ்வாறாக மதவாத, இனவாத சிந்தனையினை விற்பனை செய்யும் தேசமாக பன்மைத்துவ இலங்கை தேசம் மாறிவருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

3) சமூக ரீதியான காரணங்கள்

சமூக ரீதியான பரஸ்பர புரிந்துணர்வின்மையும் நாட்டிலுள்ள கல்வி, பொருளாதாரம், தொழில்வாய்ப்புகள் போன்ற துறைகளிலுள்ள போட்டியும் பொறாமையும் மதக்கலவரங்களுக்கும் இனமோதல்களுக்கும் காரணமாய் அமைகின்றன.மேலும் இங்கு வாழும் பெரும்பாலானவர்கள் தனித்துவம் என்ற பெயரில் வாழ்வின் அனைத்து தளங்களிலும் தமது சமயத்தவர்களுடன் மாத்திரமே சேர்ந்து வாழ விழைகின்றனர்.இந்த சிந்தனையின் விளைவாக அரசியலில் மதத்தையும் இனத்தையும் பிரதிபலிக்கும் கட்சிகளும்,கல்வித்துறையில் பாடசாலைகளும் என தோற்றம் பெற்றுள்ளதை அவதானிக்கலாம். இதனால் ஒரு சமயத்தவருக்கு பிற சமயத்தவர்களை பற்றி அவர்களுடன் உயிரோட்டமான நல்லுறவை பேணுவதற்கு வழி வகுக்ககூடிய அளவு மானசீகமான புரிந்துணர்வு ஏற்படாது. மாறாக ஒருவரைப் பற்றி அடுத்த சமூகத்தவருக்கு அந்நிய தன்மையும் சந்தேகப் பார்வையும் பயமும் ஏற்படுவது தவிர்கமுடியாதது. இவ்வாறாக ஒதுங்கி வாழுவதும் இப்பிரச்சினைக்கான மற்றொரு காரணமாகும்.

4) சமய ரீதியான காரணங்கள்

அடுத்த சமூகத்தவரது மத உரிமைகளை அங்கீகரிக்கும் மனப்பாங்கின்மையும் காழ்புணர்வும், தனது மதத்தின் மீதான வெறியும் முரண்பாடுகள், இனக்கலவரங்கள் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களாக அமைகின்ற அதே வேளை, மத சகிப்புத்தன்மை இன்மை, பிறரது சமய உணர்வுகளை மதியாமை என்பனவும் இதற்குரிய காரணங்களாக இருப்பதுடன் மதங்களின் எழுச்சி வீழ்ச்சிக்கும், பின்னடைவுகளுக்கும் வழிகோழுகிறது.

5) அது மாத்திரமன்றி பிற சமயங்களைப் பற்றியும் தமது சமயத்தை பற்றியுமுள்ள அறியாமையும் தப்பபிப்பிராயமும் கூட இப் பிரச்சினைகளுக்குரிய காரணிகளாக இருக்கின்றன.

இத்தகு காரணிகளால் முரண்பாடுகள், இன,மத வன்முறைகளை உருவாகி,மேற்படி பல்வேறு பாதக விளைவுகளை இந்த தேசத்திலே உண்டாக்கிக்கொண்டிருக்கும் நிலைமயில் மாற்றங்களை காண்பதற்கும், சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கும் கீழ் வரும் சில அடிப்படையான முன்மொழிவுகளை இந்தக்கட்டுரையில் முன்வைக்கிறேன்.

**முன்மொழிவுகள்**

(1) .பன்மைத்துவ இலங்கை தேசத்தில் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற இருசாராரும் தத்தமது தனித்துவங்களையும் இழந்து விடாது, முரண்படாமல் சகவாழ்வுடன் இணக்கமாக வாழ்வதற்கு மூவகை சிந்தனைக் கோட்பாடுகளின் பால் கவனம் செலுத்த வேண்டும்.

1. **சிறுபான்மையினருக்கான வாழ்வொழுங்கொன்றை ஏற்படுத்தல்.** அதாவது பெரும் பான்மையினருடைய மத,கலாசார, பாரம்பரியங்களுக்கு மத்தியில், சிறுபான்மையினருக்காக அவரவர்களுடைய மத அடிப் படையில் அவர்கள் எப்படி இத்தேசத்தில் வாழ்வது என்பதற்கான ஒழுங்முறையை சிறப்பாக உருவாக்கள்.
2. **எதனை முதன்மைப்படுத்துவது என்பதில் அதி கூடிய கவனம் செலுத்துதல்**. பன்தைத்துவ ஒழுங்கில் இரு சாராருமே (பெரும்பான்மை, சிறுபான்மை) தத்தமது சமூக,சமய தேவைகளில் எதனை முதன்மைப் படுத்துவது என்பதில் அதி கூடிய கவனம் செலுத்துதல். அதாவது ஒவ்வொரு விடயத்துக்கும் அதற்குறிய பெறுமானத்தை வழங்கி, எதை எப்பெழுது முற்படுத்துவது, எதற்கு எப்பொழுது முன்னுரிமை கொடுப்பது என்பதை கவனத்தில் கொண்டு செயற்படல்.
3. **பொதுத் தளத்தில் இணைந்து செயற்படுவதும், முரண்பாடுகளை பண்பாடுடன் அணுகி தீர்வு காண்பதும்.** முரண்பாடுகள்,கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் வேற்றுமையில் ஒற்றுமையும் முரண்பாடுகளிள் உடன்பாடும் கொண்டு பொதுத் தளத்தில் இணைந்து செயற்படுவதும், முரண்பாடுகளை பண்பாடுடன் அணுகி தீர்வு காண்பதும். இதன் பயனாக கலவரங்கள்,மோதல்களை முற்றாக தடுக்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுகிறது. அதவாது சம காலத்தில் தேசத்தில் நல்ல மனிதனாகவும் நற்பிரஜையாகவும் வாழ்வது.

(2) சகவாழ்வை பாதுகாப்பதற்கான வழிமுறைகளை அமுல்படுத்தல்

- பரஸ்பரம் பேணல்.
- சமூக நீதி பேணல்.
- மனிதன் மதிக்கப்படல்.
- மனித சமத்துவம் பேணல்.
- சமூகத்தில் பன்மைத்துவத்தை அங்கீகரித்து வாழ்தல்
- கொள்கை மற்றும் கருத்துச் சுதந்திரம் வழங்கப்படல்.
- பன்மைத்துவம் பிரபஞ்ச நியதி என்பதை உணர்த்துதல்.
- மனிதன் அடுத்த மனிதனுக்கு பயனுள்ளவனாக இருத்தல்.
- சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்ற நிலையை தோற்றுவித்தல்.
- சகல மதத்தவர்களின் உரிமைகளுக்கான உத்தரவாதாம் வழங்குதல்.
- மனிதர்கள் எல்லோரும் சகோதரர்கள் என்ற நிலையை தோற்று வித்தல்.

(3) மனித உறவுகளை உடைக்கும் கிழ் வரும் அம்சங்களை தவிர்த்தல்

- தனித்தவத்தை பேசுதல்.

- முரண்படக்கூடிய தலங்களை வெறியாக மாற்றிக் கொள்வது.
- நன்மைகளுக்கு எதிராக செயற்படுவதும் தீமைகளுக்கு துணை நிற்பதும்

(4) நாட்டில் அனைவருக்கும் இலங்கைத் தேச சமயங்கள், மொழிகள் பற்றிய அறிவூட்டல்
(5) மத உரிமைகளை அறிந்து மதித்து நடத்தலும் பேணிப் பாதுகாத்தலும்
(6) பாடத்திட்டம் கலைத்திட்டங்களை பயன்படுத்தல்
(7) சகல சமயத்தவரையும் ஒன்றினைத்த வேலைத்திட்டம்
(8) ஊடகங்களை ஒழுங்படுத்தல், சீரமைத்தல்
(9) அரசியலில் மதவாதத்தை பயன்படுத்துவதை முற்றாக தடுத்தல்
(10) ஆய்வுகளை மேற்கொள்ளல்

**சாராம்சம்**

ஒரு பெரும்பான்மை ஆட்சியில் ஒரு போதும் மற்றொரு சிறுபான்மை சமூகம்,இனம்,மதம் பாதிக்கப்படக் கூடாது என்பதற்கு நல்லதோர் முன்மாதிரியை இஸ்லாம் தருகிறது. இஸ்லாமிய பெரும்பான்மை ஆட்சிச் சூழலில் எப்படி முஸ்லிம் ஆட்சியாளர்கள் பன்மைத்துவத்தை அங்கிகரித்து வாழ்ந்துள்ளனர் என்பதையும் அவை உணர்த்துகிறது. நிச்சயமக அவரவர்களது உரிமைகள், சலுகைகளை வழங்கி அமைதியாக வாழ விடுவதும் அல்லது வாழ வைப்பதும் தான் பன்மைத்துவத்தை அங்கிகறிக்கும் தேசத்தின் சிறப்பியல்பாகும்.இன,மத முரண்பாடுகள்,மோதல்கள் நிறைந்த பன்மைத்துவ சமுதாயத்தில், இன உறவு, சகவாழ்வு கட்டி யெழுப்பப்படுவது காலத்தின் கட்டாயமாகும். தற்காலத்தில் அற்ப முரண்பாடுகள் கூட சமூகங்களுக்கிடையே பெரும் மோதல்களையும் விரிசல்களையும் தோற்றுவிக்கக் கூடிய வகையில், பல இன வாத, மத வாத பண்பு கொண்ட தனிநபர்கள் மற்றும் குழுக்களும் ஊடகங்களும் தொழிற்பட்டு வருவது வெளிப்படையான உண்மை. அந்தவகையில் சமூகங்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதனால் இத்தேசத்தில் ஏற்பட்ட விளைவுகளை முன்வைத்து, அவற்றுக்கான தீர்வுகளை முன்வைப்பதனூடாக, சக வாழ்வை கட்டியெழுப்புவது மிகவும் இன்றியமையாததாக காணப்படுகின்றது. அதற்கு எனது இந்தக்கட்டுரை துணைபுரியும் எனக்கருதுகிறேன்.

**உசாத்துணைகள்**

[1] முகம்மது பாழில்,எம்.எ.ஸீ.(2018)*சமூக ஒற்றுமை காலத்தின் தேவை சன்மார்க்கக் கடமை*, கொழும்பு, அகில இலங்கை ஜம்இயதுல் உலமா வெளியீடு.

[2] தாஹா ஜாபிர் அல்வானி, (2017),*முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்*இ ருளுயுஇஜஜஜஐவு வெளியீடு.

[3] அஹமத் அல் றைஸுனி, (2016),*அஷ்ஷுறா கலந்தாலோசித்தல் பற்றிய குர்ஆனிய கோட்பாடு,*ருளுயுஇஜஜஜஐவு வெளியீடு.

[4] ஹாரிஸ்,எச்.எல்.எம்.(2013)*சகவாழ்வு சாத்தியப்படுவதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும்*, இலங்கை, விஸ்டம் பப்லிசர்ஸ்.

[5] ஜோரஜ் ப்ரெக்ஸ்,.(2004),*பல்வகையினைக் கையாளுதல் இலங்கையில் சமாதானமும் முரண்பாடும் பற்றிய சொல்லாடல்*நெதர்லாந்து. சர்வதேச உறவுகள் நிலையம்.

[6] அனஸ்,எம்.எஸ்.எம்.,அமீர்தீன்,வீ.வஸீல்,ஏ.ஜே.எல்.(2003*),இலங்கையில் இனக்கலவரங்களும் முஸ்லிம்களும் சிங்கள – முஸ்லிம், தமிழ் - முஸ்லிம் இன வன்முறைகளும் இன உறவுப் பிரச்சினைகளும் 1915 முதல் 2002 வரை ஓர் ஆய்வு,*கொழும்பு.

[7] முகம்மது சமீம், (1997),*ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்.* இலங்கை, குமரன் பப்ளி ஷரஸ்.

[8] அப்துல் கறீம்,மு.(1996*),இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்*, திண்டுக்கல்,ஆயிஸா பதிப்பகம்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே*

© 2023, IRJTSR